# அமெரிக்கப் பயணச் சிறகுகள் 1

## உங்களில் ஒருவன் கடிதம்... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

ரியாலிட்டி என்ற டேட்டா சென்டர் தமிழ்நாட்டில் தனது நிறுவனத்தைத் தொடங்குவதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் சான்பிரான்சிஸ்கோ கருத்தரங்கில் நடைபெற்றது. டேட்டா சென்டர் நிறுவனத்தின் தலைமை வருவாய் அலுவலர் காலின் மெக்லின் தனது உரையில் தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டிற்கான நல்வாய்ப்புகளை எடுத்துரைத்தார்.

இத்தகைய சிறப்பான பயனங்களைத் தரும் நிகழ்வில் அமர்ந்திருந்தபோது, கழகம் ஆறாவது முறையாக ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு, வெளிநாடுகளில் இது போல ஆறு முறை முதலீட்டாளர் மாநாடுகள் நடத்தப்பட்டிருப்பதையும், தமிழ்நாட்டில் சென்னை, கோவை, தூத்துக்குடி ஆகியவற்றில் நடந்தவற்றையும் சேர்த்து மொத்தமாக 15 மாநாடுகள் நடைபெற்றிருப்பதையும் எண்ணிப் பார்த்தேன்.

சான் பிரான்சிஸ்கோவில் நடந்த முதலீட்டாளர் மாநாட்டில் நான் உரையாற்றும் போது, வாய்ப்புகளை வழங்கக்கூடிய அமெரிக்க நாட்டிற்கு வந்திருப்பதை பெருமையாகக் கருதுவதை என் உரையில் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டில் 6-ஆவது முறையாக ஆட்சி அமைத்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலமைச்சர் என்பதையும், எளிய மக்களுக்கான இந்த இயக்கத்தை பேரறிஞர் அண்ணா கட்டியமைத்ததையும், அந்த அண்ணா வழியில் நவீனத் தமிழ்நாட்டை முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கியதையும் எடுத்துக் கூறி, இந்தியாவில் அதிகளவில் நகர்ப்புறமயமான மாநிலம் தமிழ்நாடுதான் என்பதால், இங்கு தொழில் வளர்ச்சிக்கான வசதியான கட்டமைப்புகள் இருப்பதையும் அவர்களிடம் கூறினேன். ஆசிய நாடுகளின் நுழைவாயிலாக சென்னை அமைந்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 39 ஆயிரம் தொழிற்சாலைகளும், அதில் பணியாற்றக்கூடிய 2.6 மில்லியன் அளவிற்குப் பணியாளர்கள் இருப்பதால், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு அதிகமாக உள்ளதையும் கூறி, அமெரிக்க நிறுவனத்தினர் தமிழ்நாட்டில் தாராளமாக முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்பதையும், அவர்களுக்குத் தேவைப்படும் கட்டமைப்புகளைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றித் தரும் என்ற உறுதியையும் வழங்கினேன்.

**அயலகத்திலும் தமிழ் உறவு - கழகக் கொள்கை உணர்வு**

மனதிற்கும் மாநிலத்திற்கும் நிறைவான வகையில் அமைந்த இந்த முதலீட்டாளர் மாநாடு முடிவடைந்தபிறகு, ஃபேர்மாண்ட் ஹோட்டலுக்குத் திரும்பியபோது, லாபியில் தமிழர்கள் காத்திருந்தனர். ஹோட்டலில் இருந்து புறப்படும்போதும், திரும்பி வரும் போதும், உங்களில் ஒருவனான என்னைக் காண வந்திருக்கும் தமிழர்களைக் காண்பது மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு சில தமிழர்கள் என்னைப் பார்த்ததுமே உணர்ச்சிவசப்பட்டு, கண் கலங்கிவிட்டார்கள். நமக்கும் அவர்களுக்கும் இருப்பது இரத்த உறவல்ல. அதைவிடவும் உயர்ந்த தமிழ் உறவல்லவா.. அந்த உணர்வுடன் அவர்களிடம் அன்பாகப் பேசி, ஆறுதல்படுத்தி, அவர்கள் வழங்கிய புத்தகங்களையும் பூங்கொத்துகளையும் அன்புடன் பெற்றுக்கொண்டேன். ஒருசிலர் தங்கள் புத்தகங்களில் என் கையொப்பம் பெற்று மகிழ்ந்தனர். பலர் வாழ்த்துக் கவிதைகள் வழங்கினர். சிலர் கடிதங்களை அனுப்பியிருந்தார்கள்.

அமெரிக்கவாழ் தமிழர்கள் அனைவரும் அன்பு காட்டிய நிலையில், கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடம் கூடுதல் பாசம் வெளிப்படுவது இயல்புதானே.. அப்படியொரு பாசத்தை, தென்பாண்டிச் சிங்கமாக முகவை மாவட்டத்தில் கழகத்தைக் கட்டிக் காத்தவரும், சிறுகதை மன்னர் எனப் பெயர் பெற்றவருமான எஸ்.எஸ். தென்னரசு அவர்களின் குடும்ப உறவு மூலம் அமெரிக்காவில் கண்டுணர்ந்தேன். தென்னரசு அவர்களின் பேரன் கதிர் தென்னரசு தற்போது அமெரிக்காவில் வசிக்கிறார். அவர் பழைய முரசொலி நாளிதழில் வெளியான தன்னுடைய கையெழுத்திலான கடிதத்தை என்னிடம் அளித்தார். அது வெளியானபோது அவர் நான்காம் வகுப்பு மாணவர்.

2001-ஆம் ஆண்டு ஜூன் மாதக் கடைசியில் நள்ளிரவு நேரத்தில், அ.தி.மு.க. ஆட்சியின் போலீசார் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களின் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று, பொய்வழக்கில் கைது செய்து, இரக்கமின்றி இழுத்துச் சென்றபோது நாடே பதறிய நிலையில், நான்காம் வகுப்பு மாணவரான கதிர் தென்னரசும் பதறியிருக்கிறார். "டியர் கலைஞர் தாத்தா" என்று தொடங்கி, சிறைவாசத்தில் இருந்த தலைவர் கலைஞருக்குக் கடிதமும் எழுதியிருக்கிறார்.

தலைவர் அவர்கள் சிறை வாசலில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அழுதுவிட்டதையும், அவரை ஆறுதல்படுத்திய அவரது அம்மா, ஒரு வாரம் கழித்து, தாத்தாவைப் பார்க்கப் போகலாம் என்று சொன்னதாகவும் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்த கதிர், தன்னுடைய அப்பா தன் மீது செல்லமாக இருப்பார் என்றும், ஒரு நாள் முரசொலி நாளிதழ் மீது சூடான காபி டம்ளரை வைத்துவிட்டதால் அப்பா தன்னை அடித்துவிட்டார் என்றும் அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறார். "தாத்தா.. நான் டெய்லி முரசொலி கடிதங்கள் வாசிச்சு தமிழ் நல்லா பழகிட்டேன்" என்று குறிப்பிட்டிருப்பதுடன், எமர்ஜென்சி காலத்தில் தனது அம்மா இளவரசியின் கேள்விக்குத் தலைவர் கலைஞர் பதில் எழுதி அனுப்பியதைக் குறிப்பிட்டு, என் கேள்விக்கும் பதில் சொல்வீங்களா? என்று கேட்டு, அ.தி.மு.க ஆட்சியின் கொடுங்கோல் சிறையில் இருந்த கலைஞரின் மனதுக்கு இதமான மருந்து தடவும் வகையில் அவரின் பிஞ்சுக் கரம் கடிதம் எழுதியிருக்கிறது. அதைத் தலைவரின் மூத்த பிள்ளையான முரசொலி 20-7-2001 அன்று வெளியிட்டிருக்கிறது. காலத்திற்கும் நிலைத்து நிற்கும் அந்தக் கருவூலத்தைத் தான் கதிர் தென்னரசு அமெரிக்காவில் என்னிடம் வழங்கி மகிழ்ந்தார். அதைப் படிக்கும்போது எத்தனையெத்தனை உணர்வலைகள். கடல் கடந்து வந்தாலும் கழகக் குடும்பத்தினரின் உணர்விலும் உதிரத்திலும் கறுப்பு - சிவப்புக் கொள்கையே உயிரோட்டமாக இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

சென்னையில் வசிக்கும் திருவண்ணாமலையைச் சேர்ந்த கழகத்தின் மூத்த தொண்டர் ஒருவரின் கடிதமும் என்னை நெகிழ வைத்தது. வேலைக்காகச் சொந்த ஊரிலிருந்து சென்னைக்கு வந்து கூலித்தொழில் செய்த அந்தத் தொண்டர், கழக மாநாடுகள் பொதுக்கூட்டங்கள் எதுவாக இருந்தாலும் தவறாமல் கலந்துகொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். மேடைகளில் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர், இனமானப் பேராசிரியர், கழக முன்னணியினர் பேசுவதைக் கேட்டவர், அது போலத் தன்னால் பேச முடியாவிட்டாலும், தன் பிள்ளைகள் கழகத்தின் கொள்கைகளை முழங்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் அவர்களைப் பேச வைத்திருக்கிறார். அந்தத் தொண்டரின் மகள் சிறப்பாகப் பேசப் பழகியதுடன் மட்டுமல்லாமல், சட்டம் பயின்று, பட்டம் பெற்று, கழக ஆட்சியில் அரசு வழக்கறிஞராக இருப்பதையும், தனது மகன் அமெரிக்காவில் உள்ள நிறுவனத்தில் உயர்ந்த பொறுப்பில் இருப்பதையும் தன்னுடைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

கூலித் தொழிலாளியான ஒரு தொண்டர் தன் மகளை வழக்கறிஞராகவும் மகனை பெரிய நிறுவனத்தின் உயர் அலுவலராகவும் ஆக்குவதற்கு கழகத்தின் கொள்கைகளே உந்துசக்தியாக இருந்திருக்கின்றன என்பதை அமெரிக்கப் பயணத்தில் அறிந்துகொண்ட போது, தலைமுறைகளை வாழ வைக்கும் நம் இயக்கம் 75 ஆண்டுகளைக் கடந்து பீடு நடை போடுவதையும், இந்த இயக்கத்தின் தேவை வருங்காலத் தலைமுறைகளின் வளர்ச்சிக்கும் அவசியம் என்பதையும் உணர்ந்தேன். இப்படி எத்தனையோ உணர்ச்சிகரமான கடிதங்கள், கவிதைகள் என பயணம் முழுவதும் கைகளுக்கு கிடைத்தது.

**சிலிகான் வேலியில் சிறப்பான ஒப்பந்தங்கள்!**

நம் சென்னையைப் போலவே கடற்கரை நகரமான சான் பிரான்சிஸ்கோ விரிகுடாவில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் நிறைந்திருக்கும் பகுதியை சிலிக்கான் வேலி என்று அழைக்கிறார்கள். உலக அளவில் நடைபெற்று வரும் டிஜிட்டல் புரட்சியின் மையமாகத் திகழ்கிறது சான் பிரான்சிஸ்கோ விரிகுடா பகுதி. இதன் சிலிகான் வேலியில்தான் ஆப்பிள், கூகுள், மெட்டா என உலகின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைந்துள்ளன.

அமெரிக்காவுக்கு சிலிக்கான் வேலி என்றால் தமிழ்நாட்டிற்கு ஓ.எம்.ஆர். எனப்படும் ராஜீவ் காந்தி சாலையின் ஐ.டி. காரிடர். புத்தாயிரம் ஆண்டான 2000த்தில் தரமணியில் நம் உயிர் நிகர் தலைவர் அவர்களின் ஆட்சித் திறத்தால் உருவாக்கப்பட்டு, இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது டைடல் பார்க். அதனைத் தொடர்ந்து, கழக ஆட்சியின் தகவல் தொழில்நுட்பக் கொள்கையால் தரமணி முதல் சோழிங்கநல்லூர் வரையிலான ஓ.எம்.ஆர். சாலை பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் மையமாக மாறியிருக்கிறது. நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டிருக்கிறது. தலைவர் கலைஞரின் உலகளாவிய சிந்தனையையும் தொலைநோக்குப் பார்வையிலான திட்டங்களையும் நினைத்துப் பார்த்தபடியே ஆகஸ்ட் 31 - ஆம் நாள் சிலிகான் வேலியில் பயணித்தோம்.

தொழில்துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி.ராஜா, சிலிகான் வேலியில் உள்ள நிறுவனங்கள் எப்படி செயல்படுகின்றன என்பதைச் சொல்லிக் கொண்டே வந்தார். திராவிட மாடல் அரசு அமைந்தபிறகு, இந்தியாவில் தமிழ்நாடுதான் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் மாநிலமாகத் திகழ்கிறது. அதை இன்னும் மேம்படுத்தும் வகையில், சிலிக்கான் வேலியில் நாங்கள் முதலில் சென்றது ஆப்பிள் நிறுவனம். அது மிகவும் பிரம்மாண்டமானதாக இருந்ததுடன், சூழலியல் கண்ணோட்டத்துடன் சிறப்பான வடிவமைப்பில் திகழ்ந்தது. ஆப்பிள் நிறுவனத்தின் நிறுவனரான ஸ்டீவ் ஜாப்ஸ் இதனைப் பார்த்துப் பார்த்து வடிவமைத்திருக்கிறார். நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள், ஏதோ ஒரு கம்பெனிக்குள் இருக்கிறோம் என்று நினைக்காமல், தங்கள் வீட்டில் - தங்கள் சொந்த இடத்தில் இருப்பது போன்ற மனநிலையுடன் பணியாற்ற வேண்டும் என்று திட்டமிட்டு அமைத்திருக்கிறார். இது பற்றி தம்பி டி.ஆர்.பி. ராஜா விளக்கிக்கொண்டே வந்தார்.

ஆப்பிள் நிறுவன உயர் அலுவலர்களுடனான சந்திப்பு இனிமையாகத் தொடங்கியது. அவர்கள் ஏற்கனவே தமிழ்நாட்டில் தங்களின் உற்பத்தி நிறுவனங்கள் சிறப்பாக இருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். மேலும் விரிவாக்கம் செய்வது குறித்து கருத்துகள் பரிமாறப்பட்டன. எதிர்கால முதலீடுகளுக்கும் அந்த கூட்டம் வழிவகுத்தது.

அதனைத் தொடர்ந்து கூகுள் நிறுவனத்திற்குச் சென்றோம். உள்ளங்கைக்குள் உலகம் என்பதைச் செயல்படுத்திக் காட்டியிருக்கும் உலகின் முன்னணி நிறுவனம் கூகுள். எந்த மூலையில் இருந்தாலும், தன் கையில் உள்ள அலைபேசியில் கூகுள் மேப் போட்டு, தான் செல்ல வேண்டிய இடத்திற்குச் சரியாக செல்லக்கூடிய அளவில் மக்களின் அன்றாடப் பயன்பாட்டுடன் தொடர்புடைய நிறுவனம். அத்தகைய கூகுள் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் சுந்தர் பிச்சை என்ற தமிழர் இருக்கிறார் என்பது பலரும் அறிந்த பெருமைக்குரிய செய்தி. கூகுள் நிறுவனத்திற்குச் சென்ற போது, அந்த நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளிலும் தமிழர்கள் பலர் நல்ல பொறுப்பில் இருப்பது தெரிந்தது. இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் அதிகளவில் பணியாற்றுகிறார்கள்.

கூகுள் நிறுவன உயர் அலுவலர்களுடனான சந்திப்பின்போது, ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவுத் துறையில் உருவாகி வரும் புதிய முயற்சிகள், கற்பனைக்கெட்டாத தொழில்நுட்பங்கள் சாத்தியமாகிவருவதைக் குறித்து பேசினோம். அவர்களிடம் நான், "இந்தியாவுக்கே முன்னோடியாகத் தமிழ்நாட்டில் பல திட்டங்களை நாங்கள் நிறைவேற்றி வருகிறோம். அதில் என்னுடைய கனவுத் திட்டம் என்பது நான் முதல்வன் திட்டம். அதில் இடம்பெறும் மாணவ மாணவியருக்குச் செயற்கை நுண்ணறிவுத் துறையில் கூகுள் நிறுவனம் பயிற்சியளிக்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டேன். உடனடியாக அதனை ஒப்புக்கொண்ட கூகுள் நிறுவனத்தினர், தமிழ்நாட்டில் 20 இலட்சம் மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவுத் துறையில் பயிற்சியளிக்கும் திட்டத்திற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டனர். கைடன்ஸ் தமிழ்நாடு நிறுவனத்துடன் இணைந்து கூகுள் நிறுவனத்தின் இந்தப் பயிற்சி நடைமுறைக்கு வரும்போது, தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலம் மிகப் பெரிய முன்னேற்றத்தைக் காணும். கூகுள் நிறுவனம் தற்போது போன், ட்ரோன் போன்ற தயாரிப்புகளிலும் முனைப்பாக இருப்பதால் அவை தொடர்பான பேச்சுவார்த்தைகளும் சுமுகமாக அமைந்தன.

சிலிக்கான் வேலியில் அடுத்த நிறுவனம், கம்ப்யூட்டர் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில் முதன்மையாக விளங்கும் மைக்ரோசாஃப்ட் நிறுவனம். அந்த நிறுவனத்தில் முதன்மைப் பொறுப்புகளில் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நம்மை வரவேற்றதுடன், தமிழ்ப் பாடல் ஒன்றை ஒலிக்கவைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் புதிய கண்டுபிடிப்புகளையும், முயற்சிகளையும் நமக்கு விளக்கினர். சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர் மாநாட்டில் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் 2570 கோடி ரூபாய்க்கான முதலீடுகளுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருப்பதால் அதனை இன்னும் விரைவாக நிறைவேற்றுவது குறித்து அவர்களுடன் உரையாடினோம். அவை நவம்பர்-டிசம்பர் மாதத்தில் நிறைவேற்றப்படும் என்றும், அத்துடன் கூடுதலான முதலீடுகள் குறித்தும் பரிசீலிப்பதாகவும் உறுதியளித்தனர்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னணி வகிக்கும் இந்த மூன்று நிறுவனங்களைப் பார்வையிடுவதற்குக் காலை முதல் பிற்பகல் வரை ஆகிவிட்டது. அமெரிக்க நேரம், மாலை 3 மணி. இப்போதாவது மதிய உணவு சாப்பிடலாமே என்றன எங்களின் வயிறுகள். இந்திய வகை உணவு அந்த சிலிக்கான் வேலியிலேயே கிடைக்கும் என்பதை அறிந்துகொண்டோம். கோயம்புத்தூரைச் சேர்ந்தவர்கள் கோவை கபே என்ற உணவகத்தை நடத்துகின்றனர். அங்கே நமது பாரம்பரியப்படி, வாழை இலையில், நம் ஊர் சாப்பாட்டைப் பரிமாறினார்கள். பசிக்கேற்ற ருசியுடன் உணவு சிறப்பாக இருந்தது.

**வாழ்த்தி வரவேற்ற நல் உள்ளங்கள்!**

அன்று மாலையில் சான்பிரான்சிஸ்கோவில் அமெரிக்கவாழ் தமிழர்கள் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களுடனான சந்திப்புக்கு இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது. சிறிய அரங்கம் - நிறைந்த கூட்டம் - பொங்கி வழிந்த பேரன்பு- வாழ்த்து முழக்கங்கள் என உள்ளம் ஒன்றிய நிகழ்வாக அது அமைந்தது. என்னுடைய வாழ்த்துகளை அவர்களுடன் பகிர்ந்து கொண்டு பேசினேன். ஆரவாரத்துடன் வரவேற்று மகிழ்ந்தனர். படம் எடுத்துக்கொள்ளவும், கைக்குலுக்கவும், பரிசுகள் வழங்கவும் அவர்கள் காட்டிய ஆர்வம் திக்குமுக்காட வைத்தது. அதனை எனக்கான தனிப்பட்ட வரவேற்பாகக் கருதவில்லை. என்னை முதலமைச்சர் என்ற பொறுப்பில் அமர வைத்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்குமான வரவேற்பாகவே கருதினேன்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 31.8.2024 அன்று சான்பிரான்சிஸ்கோவில், ஓமியம் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே எலக்ட்ரோலைசலர்கள் உற்பத்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் துறையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மறுநாள் செப்டம்பர் 1 அன்று பசுமை ஹைட்ரஜன் தயாரிப்பதில் உலகின் முன்னணி நிறுவனமான ஓமியம் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 400 கோடி ரூபாய் முதலீட்டில் 500 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் அமைந்தது. அந்த நாளில் மற்றொரு புதிய அனுபவம் வாய்த்தது. அறிவியல் தொழில்நுட்பம் எந்தளவில் வளர்ந்திருக்கிறது என்பதையும், அதில் அமெரிக்கா எந்தளவு முன்னேறியிருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்தது. அது, ஆள் இல்லாத காரில் பயணம்.

கடற்கரை நகரமான சான்பிரான்சிஸ்கோவில் கடலையொட்டி மலையும் உண்டு. அந்த மலையில் பல நிறுவனங்கள் உள்ளன. அவற்றிற்குச் செல்லும் சாலைகள் வளைந்து நெளிந்து செல்லக்கூடியவை. ஒரு கட்டடத்திற்கும் இன்னொரு கட்டடத்திற்கும் இடையிலான அந்த வளைவான சாலைகளில் வாகனப் பயணம் என்பது புதுவித அனுபவம். சாகசம் போல இருக்கும். கடலுக்கும் மலைக்கும் இடையிலான சாலையில் ஆள் இல்லாத காரில் பயணித்தது இனிமையான சாகசம் போல அமைந்தது. வார இறுதி நாட்களான சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கடற்கரைக்கு வருகிறார்கள். சென்னை மெரினா போன்ற நீண்ட கடற்கரையாக அது இல்லை என்றாலும், மக்களின் மனம் கவரும் இடமாக அமைந்திருக்கிறது.

கடலில் சற்று தொலைவில் ஒரு பாறைத் தீவு உள்ளது. அதன் மீது பழமையான சிறைச்சாலை அமைந்துள்ளது. சிறைவாசத்தின் மூலம் பொதுவாழ்க்கைக்குள் நுழைந்த எனக்கு அதனைப் பார்க்கும் ஆவல் ஏற்பட்டது. அல்காட்ரஸ் என்கிற அந்த பாறைத் தீவில் உள்ள சிறை, உலகின் மிகவும் ஆபத்தான சிறைச்சாலையாகும். அதில் அடைக்கப்பட்ட கைதிகளால் தப்பிக்கவே முடியாது. சிறைக்கம்பிகளைக் கடந்து கடலில் குதித்தால், பனிக்கட்டி போல குளிர்ச்சியாக இருக்கும் நீரைக் கடந்து கடற்கரைக்கு வருவது கடினம். தற்போது சிறைச்சாலை இயங்கவில்லை. அருங்காட்சியகமாகச் செயல்படுகிறது. நாங்கள் சென்ற நாளில் பொதுமக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால், நேரில் பார்க்கும் வாய்ப்பு அமையவில்லை. எழில்மிகு சான் பிரான்சிஸ்கோ கடற்கரையில் சைக்கிள் ஓட்டியது இனிய அனுபவமாக இருந்தது.

**சிகாகோ நோக்கிப் பறந்த சிறகுகள்!**

சான் பிரான்சிஸ்கோ நகரம் உழைப்புக்கும் உரிமைக்கும் பெயர் பெற்றதாகும். 20ஆம் நூற்றாண்டில் இங்கு நடந்த தொழிலாளர் போராட்டங்கள், 1960களில் நடந்த சிவில் உரிமை இயக்கம் போன்றவற்றால் சமத்துவக் கொள்கையின் களமாக விளங்குகிறது. இங்குச் செப்டம்பர் மாதத்தின் முதல் திங்கள் கிழமையைத் (இந்த ஆண்டு 2-ஆம் தேதி) தொழிலாளர் நாளாகக் கடைப்பிடிக்கிறார்கள். குறிப்பிடத்தக்க அந்த நாளில், தமிழ்நாட்டிற்கான முதலீடுகளுக்கு அகலமான வாசலைத் திறந்து வைத்த சான்பிரான்சிஸ்கோ பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த மகிழ்ச்சி. புகழ்பெற்ற ஃபேர்மாண்ட் ஹோட்டலில் தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கான வரலாறும் பதிவாகியிருப்பதை நினைத்து, ஹோட்டல் வாசலில் உள்ள பாடகர் டோனி பென்னட் சிலை முன்பாகப் படம் எடுத்துக் கொண்டு, சிகாகோ நோக்கி விமானத்தில் பறந்தேன். ஐந்தரை மணி நேரப் பயணம்.

நமது இந்தியாவில் டெல்லியிலும் சென்னையிலும் கடிகாரத்தில் ஒரே நேரம்தான். இந்தியாவைவிட பரப்பளவில் பெரிய நாடான அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தின் நேரமும் சிகாகோ மாநிலத்தின் நேரமும் மாறுபடும். விமான நிலையத்தில் சிகாகோவுக்கான இந்தியத் தூதரக அதிகாரி திரு. சோமநாத் கோஷ் வரவேற்றார்.





முதல்வர் அவர்கள், நோக்கியா நிறுவனத்துடன், நடந்த சந்திப்பில் ரூ.450 கோடி முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

சான் பிரான்சிஸ்கோ போலவே சிகாகோ விமானநிலையத்திலும் அமெரிக்கவாழ் தமிழர்கள் திரண்டிருந்தனர். தமிழர்களுக்கேயுரிய பாரம்பரிய உடையுடனும், தமிழர்களின் கலையான பறை இசை, பண்பாட்டு நடனம் என அவர்கள் அளித்த வரவேற்பு, அடுத்தடுத்த சந்திப்புகளுக்கும் முதலீடுகளை ஈர்ப்பதற்கும் பெரும் நம்பிக்கையை அளிப்பதாக இருந்தது.

அன்புடன்
**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2055
ஆவணி 30
15-09-2024.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 30.8.2024 அன்று அமெரிக்கா நாட்டின் கலிபோர்னியாவில், கூகுள் நிறுவனமும், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனமும் இணைந்து தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆய்வகங்களை அமைப்பது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.